முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 280/2022

நாள்: 18.06.2024

வாதி தரப்பு 1 வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டத்தின் படி திருமதி.G.ரேவதி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | ஜெயராமன் | தாலுக்கா | : | தஞ்சாவூர். |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | ஓய்வு பெற்ற ஆசிரியர் |

பிரதி**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் இந்த வருடம்தான் பணியில் இருந்து ஓய்வு பெற்றேன்.

2) நான் திருச்சங்கோடு KSR College of Arts and Science கல்லூரியில் வேலை பார்த்து ஓய்வு பெற்றேன்.

3) என் தந்தை 1984 லும் என் தாயார் 2005 லும் இறந்தார்கள்.

4) தாவா வழக்கு சொத்து என் தந்தைக்கு சொந்தமாக இருந்தது.

5) என் தந்தை இறந்த பிறகும் என் தாயார் இறந்தபிறகும் தாவா சொத்து கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

6) தஞ்சாவூர் கரந்தையில் என் பெயரில் ஒரு வீட்டு உள்ளது என்றால் இல்லை.

7) தஞ்சாவூர் புண்ணைநல்லூர் மாரியம்மன்கோவிலில் என் பெயரில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு நான் வாங்கியது.

8) அந்த வீடு தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட வீடு இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சம்பளத்தில்தான் அந்த வீடு வாங்கப்பட்டது.

9) அந்த வீடு என் சம்பளத்தில் வாங்கபபடவில்லை என்றாலும் கூட்டு குடும்பத்தின் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட வீடு என்றால் சரியல்ல.

10) அந்த வீட்டை இந்த வழக்கில் சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

11) எங்கள் குடும்பத்திற்கு சொந்தமாக தஞ்சாவூர் காவேரி நகரில் வங்கியில் கடன் பெற்று 12 கடைகள் உள்ள ஒரு கட்டிடம் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12) வங்கியில் வாங்கிய கடன் மூலமாக அந்த கட்டிடடம் கட்டப்பட்டு அந்த கட்டிடத்தில் இருநது வரும் வாடகை வருமானத்தில் கடன் அடைக்கப்பட்டு வருகிறது என்றால் கடன் அடைக்கப்பட்டுவிட்டது.

13) இதுநாள் வரை அந்த கடன் அடைக்கப்படவில்லை என்றாலும் தற்சமயமும் கடன்

அடைக்கப்பட்டு வருகிறது என்றாலும் சரியல்ல.

14) வாடகை வருமானத்தில் இருந்து வந்த தொகையை கொண்டு அந்த வங்கி கடனை மாதாந்திர தொகை செலுத்தியதுபோக போக மீதம் உள்ள தொகை எங்களுக்குள் பிரிக்கப்பட்டு எனக்கு வரவேண்டிய தொகை என்னுடைய வங்கி கணக்கில் தற்போது வரைமாதம் மாதம் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல.

15) எனக்கு அவ்வாறு வந்திருந்தால் நான் இந்த வழக்கே தாக்கல் செய்திருக்கமாட்டேன்.

16) நான் இந்த வழக்கிற்காக பங்கு தொகை எனக்கு வரவே இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

17) வாடகை பணம், வாடகை முன் பணம் ஆகியவற்றை 1ம் பிரதிவாதி தனது சொந்த செலவிற்காக பயன்படுத்தி வருகிறார் என்று வழக்குரையில் நான் சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல. 3 பேரும் அவரவர்கள் சொந்த தேவைக்குதான் இந்த பணத்தை பெற்று வருகிறார்கள்.

18) 3 பேரும் அவரவர்கள் சொந்த தேவைக்குதான் இந்த பணத்தை பெற்று வருகிறார்கள் என்று வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல

19) வழக்கு சொத்துகள் மற்றும் இந்த வழக்கில் சேர்க்காத பிற சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை பொறுத்து தவறாது வருமான வரி கணக்கு செலுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. பணம் வருவதை வருமான வரி கணக்கில் காட்டுகிறார்கள். ஆனால் எனக்கு வரவில்லை. வருமானத்தில் இருந்து எனக்கு பங்கு வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

20) ரூ.2 லட்சத்திற்கு மேல் வாடகை பணம் வருகிறது என்று நான் சொல்லி உள்ளது உண்மையில்லை என்றாலும் ரூ.2 லட்சத்திற்கு கீழ்தான் பணம் வருகிறது என்றால் சரியல்ல.

21) சொத்துகளில் இருந்து வருகிற வருமானத்தை நான் கேட்டதாக சொல்வது உண்மையில்லை என்றாலும் நான் எந்த காலத்திலும் அவ்வாறு வருமானத்தை நான் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல.

22) தஞ்சாவூர் சிவராயர்தோட்டத்தில் உள்ள வீட்டின் முதல் தளத்தில் நான் குடியிருக்கிறேன் என்றால் நான் தங்குவதற்கு ஒரே ஒருஅறை மட்டும் கொடுத்துள்ளார்கள். குடும்பத்தோடு தங்கும் அளவிற்கு முதல் மாடியில் போதுமான வசதி உள்ளது என்றால் சரியல்ல.

23) அந்த வீட்டின் கீழ் தளத்தில் என் அண்ணன் குபேந்திரன் குடியிருந்து வருகிறார்.

24) உண்மையை மறைத்து கூட்டுகுடும்ப உறுப்பினர்களால் புண்ணைநல்லூர் மாரியம்மன் கோவில் அருகே உள்ள வீட்டில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட நபரின் மீது RLTOP 16/2022 வழக்கை தஞ்சாவூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

25) எங்களின் மூத்தவர் குபேந்திரன். அடுத்தது நான்.

26) கூட்டுகுடும்ப சொத்துக்கள் அனைத்தும் கூட்டுகுடும்ப கர்த்தா என்ற நிலையில் மூத்த அண்ணன்தான் பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல.

27) புண்ணைநல்லூர் மாரியம்மன் கோவிலில் உள்ள வீடு பெயரளவில் கூடடுகுடும்ப வருமானத்தின் மூலம் என் பெயருக்கு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

28) எனது வங்கி கணக்கை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

29) புண்ணைநல்லூர் மாரியம்மன் கோவில் உள்ள மனைக்கட்டை நான் வாங்கி அதில் உள்ள வீட்டை கட்டியதாகவும் நான்தான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்று வழக்குரையிலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளது உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல.

30) நான் அனுப்பிய அறிவிப்பிற்கு  பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள்.

31) நான் புண்ணைநல்லூர் மாரியம்மன் கோவிலில் உள்ள சொத்தை இந்த வழக்கில் சேர்க்காமலும் பல உண்மைகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-K.பூர்ண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்.